பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 குருகுலம், மாம்பாக்கம் ; நந்தன, சித்திரை ; 13—6—52. தளா-37

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## பொன்றாத் துணை

மக்கள் வாழ்நாள் அளவினை அறுதியிட்டுக் கூறினார் யாருமில்லை. பொதுவாகப் பார்க்குங்கால் 'சில் வாழ்நாள் பல் பிணியுடையார்' என்று குறிப்பிட்டுப் பேசப்படும் மக்கள் தம் புகழ் நிலைத்து நிற்க வேண்டுவாராயின் இடையீடின்றி நல்லறச் செயல்களைச் செய்து கொண்டு வருதல் நலமுடைத்து.

அருட்பண்புடையார்க்கு, நல்லறச் செயல்கள் அவர் தம் வாழ்க்கையோடு ஒன்றிப் போயிருக்கும். வேறு சிலர் அறம் செய்தற்குக் காலம் கருதுவர். 'இப்போழ்திருக்கும் நிலையில் அறம் செய்தற்கியலாது; பிறகு செல்வம் பெருகுங்கால் அறத்தைக் கவனிப்போம்' என்று காலம் கடத்துதலும் அவர்க்கு இயல்பாகும். அச்செயல் சரியன்று. திடுமென்று, வாழ்வொழியின் எண்ணிய எண்ணம் தவறுதும் மற்றும் அடுத்தடுத்து வாழ்க்கையில் நிகழும் இடையூறுகளும் பிறவும் பிற்காலத் திட்டங்களைக் கெடுப்பதுமுண்டு.

ஆகவே அறத்தைப் பிறகு செய்வோம் என்று வாளா நில்லாமல் பொருந்திய அளவில் கரவாது அறச் செயல் நிகழச் செய்தல் நல்லது.

இப் பிறவி ஒழியினும், வரும் பிறவிகளினும் வழி வழி நின்று அழிவில்லாமல் உதவி செய்து வருதலால் இஃது 'பொன்றாத்துணை' யென்னப்பட்டது.

---

அன்றறிவா மென்னா தறஞ்
செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத்
துணை

அன்று அறிவாம் என்னாது அறம் செய்க — யாம் இது பொழுது இளையம் ஆகலின் இறக்கு ஞான்று செய்தும் எனக் கருதாது அறத்தினை நாடோறும் செய்க; அது பொன்றுங்கால் பொன்றாத் துணை — அவ்வாறு செய்த அறம் இவ்வுடம்பினின்றும் உயிர் போகும் காலத்து அதற்கு அழிவில்லாத துணையாம்.

'மற்று' அசைநிலை; பொன்றாத் துணை என்றார், அறம் செய்த உடம்பு அழியினும் உயிரோடு ஒன்றி ஏனை உடம்பினும் சேறலின். இதனால் இவ்வியல்பிற்றாய அறத்தினை நிலையாத யாக்கை நிலையின பொழுதே செய்க என்பது கூறப்பட்டது. 'பொன்றா' ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

அழிவில்லாமல் துணைபுரியும் அறத்தினை, இடையீடின்றிச் செயல் வேண்டும் என்பது கருத்து.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

**குருகுலம், மாம்பாக்கம்,**

மதுராந்தகம் **P. O.**

(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | நந்தன, வைகாசி. | தளிர் |
|---|---|---|
| 4 | 13-6-52 வெள்ளி | 37 |


# பயன் தரும் செயல்

நமக்கு உரிமை யாட்சி கிடைத்து நம்மை நாமே ஆளத் தொடங்கிய அந் நாள் முதல் இது வரை, நாட்டில் மக்கள் உள்ளத்திற்குப் பொருந்தாமல் நலம் தருவதற்குப் பதில் பல வழியிலும் தொல்லைகள் தந்து வருவது உணவுப் பங்கீட்டுத் திட்டமாமாகும். காலமழை பொய்த்து நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடும் நிலையில் ஏழை எளியவர்க்கும் கால் வயிற்றுணவாவது தவறாமல் கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் பயனாகவே ஆட்சியினர் நாடெங்கும் உணவுப் பங்கீட்டுத் திட்டத்தை நடை முறையிற் கொண்டு வந்தனர். ஆனால் எதிர்பார்த்த அளவுக்குப் பயன் பெற இயலவில்லை. ஆட்சியாளர், இதுவரை சாம பேத தான தண்டம் என்று கூறப்படும் நான்குவகை முறையிலும் இத் திட்டத்தை நெகிழவிடாது தொடர்ந்து நல்ல முறையில் நடத்த முயன்றனர்.

ஆனால், மக்களுக்குள் ஒற்றுமை மனப்பான்மை சிறிது சிறிதாக நழுவத் தலைப்பட்டுப் படிப் படியாக நாட்டில் பொய்ம்மை, பொருட் பதுக்கம், கரவுமனப் பான்மை, நம்பிக்கையின்மை, இலஞ்சம் (**Corruption**) முதலிய தீய செயல்கள் வளரத் தொடங்கின. ஆட்சியாளர் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் கருப்புச் சந்தை (**Black Market**) வாணிபங்கள் நாளுக்கு ஒரு விதமாகவும் பொழுதுக் கொரு வகையாகவும் வளர்ந்தன. இவற்றால், இயல்பிலேயே செல்வம் படைத்தவர் மேலு மேலும் அறனல்லா வழிகளில் செல்வம் கொழித்தனர். ஏழைகள் மிக மிகத் தாழ்வுற்று மெலிந்தனர். உணவுப் பங்கீட்டு முறை, செல்வர்க்கு விலை பொருள்களை நாட்டுக்குதவாமற் பதுக்கல், நெறியல்லா நெறிகளில் வாணிபம் செய்து பொருளைக் கொழிக்தல் இன்ன பிற செயல்களையே செய்ய ஊக்கியது.

இத் திட்டத்தால் மற்றொரு பலன், பொருட்பஞ்சம் ஒருபுறம் துன்பந் தரும் நாட்டில் எண்ணிலடங்கா உணவுப் பங்கீட்டு அலுவலகங்கள்! ஆயிரக் கணக்கான பங்கீட்டு அலுவலாளர்கள்! உண்மை உழைப்பாளர்கள் எத்துணையோ ஆயிரவர் தம் எளிய ஊதியத்துக்கு மேல் ஒரு சிறிது உயர்வும் பெறுதற்கு இயலாமல் நைந்துருகி வாழும் நேரத்தில் இப்பங்கீட்டுத் திட்டத்தில் இத்துணைப் பொருட் செலவு செய்யப் படுகின்றது! பங்கீட்டு முறை நாட்டில் நல்ல முறையில் செயற்படவில்லை என்பதை ஆட்சியினர் நன்கறிந்திருந்தனர். இம்முறை அடியோடு ஒழிககப் பட்டால் கூட நல்லதென்று முன் ஒரு முறை சென்னை முன்னாள் முதலமைச்சர் திரு ஓமந்தூர் ரெட்டியாரவர்களும் கூறியுள்ளார்.

என்ன காரணத்தாலோ இத் திட்டம் இத் துணை நாட்கள் நாட்டில் தீங்கு செய்துலவி வந்தது. ஆனால் இப்போது அதன் ஆட்சி முடியும் போல் தோன்றுகிறது. இப்பொழுது நம் மாநில முதலமைச்சராக இருந்து வரும் கனம் திரு. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் உணவுப் பங்கீட்டுத் திட்டத்தை சென்னை மாநிலப் பகுதியில் யாண்டும் தலை காட்டாதபடி அகற்றி விடப் போவதாகப் பேசியுள்ளதை அண்மையில் நாட்டில் ஒலிபெருக்கப் பட்டுள்ளது.

அவர் சொல்லியுள்ளவைகளிலிருந்து: இனிச் சென்னை மாநிலப் பகுதியில் நகரங்கள் உள்பட யாண்டும் உணவுப் பங்கீட்டு முறை நிலவாது. நிவாரணக் கடைகள் என்ற அளவில் ஆங்காங்கும் சில நடைபெறும். அரசியலார் நிர்ணயிக்கும் விலையளவுகளை மேற்கொண்டு அக் கடைகள் தொழில் நடத்தும்.

சில எளிய தொகுப்பு முறைகளைக் கையாண்டு ஆட்சிப் பொறுப்பினர் அடுத்த ஆண்டிலிருந்து, ஒவ்வோர் ஆண்டிலும் ஒன்றரை இலக்கம் டன் தானியம் மிகுதியாக விளையும் பகுதிகளிருந்து பெற்றுச் சேமித்து வைப்பர். இது மிக நெருக்கடியான நாட்களில் உதவுதற்

காக எப்பொழுதும் நிறுத்தப் பட்டிருக்கும்.

பங்கீட்டு முறைகளை, முன்னிட்டு, அரசியலார் குடிகளிடம் தானியம் அளந்து செல்வது முதலிய சடங்குகள் இனித் தலைகாட்டாது. அவரவர்க்குக் கிடைக்கும் தானியங்களை அவரவர் விருப்பம்போல் செய்து கொள்ள உரிமை பெறுவர்.

பங்கீடு அலுவலகங்கள் இனி வேலை செய்யா. நாட்டில் மக்கள் எந்நாளிலும் எளிதில் தானியங்கள் பெறும் பொருட்டுச் சென்னை மாநிலம் ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் படும். ஒவ்வொரு பிரிவும் தனக்குள் மிகுதியாய் விளையும் மாவட்டங்கள் (**Surplus Districts**) ஒன்றோ இரண்டோ பெற்றிருக்கும். இந்நிலையில் ஒவ்வொரு பிரிவிலும் பற்றாக்குறை என்பதின்றி உணவு நிலை நன்கு நடை பெறும்.

ஒவ்வொரு பெரும் பிரிவிலும் மக்கள் தானியங்களை ஓரிடமிருந்து மற்றோரிடம் கொண்டு செல்லலாம். ஆனால், ஒரு பெரும் பிரிவிலிருந்து மற்றொன்றுக்குத் தலைமீது கொண்டு செல்லும் சிற்றளவைத் தவிர வண்டி முதலியவைகளில் தானியம் கொண்டு செல்லலாகாது.

மிகவும் பஞ்சப் பகுதிகளாகக் கருதப்படும் மலையாளம் நீலகிரிப் பகுதிகளில் மட்டும் சிறிது நாட்கள் பங்கீட்டு முறை நடைமுறையில் இருந்து வரும்.

இத்தகைய செய்திகள் மக்கள் உள்ளத்துக்குப் • பெரு மகிழ்ச்சியைத் தருகின்றன. இனிப் பயிரிடும் பெருமக்களுக்குப் பங்கீட்டு அலுவலர்கள் முதலியவர்களால் எத்தகைய தொல்லைகளும் இல்லை. இனி அவர்கள், திரு, முதலமைச்சர் கூறுவது போல நாட்டுப் பற்றும், பெருந்தன்மையும், கடவுளன்புக்குரியராம் எண்ணமும், பாவச் செயல்களுக்கு அச்சமும் கொண்டு நாட்டில் விளைபொருள் மேலு மேலும் மிகுவித்து நாட்டுக்கும் தமக்கும் பெரும் பயன் தேடுவார்கள் என்று நினைக்கலாம்.

இனித் திரு, முதலமைச்சர் வேளாண் பெரு மக்களுக்கு விடுக்கும் இனிய கருத்துக்களைப் பார்த்து மகிழுங்கள் :

"Farmers, May God bless you. You may now take your grain to any place anywhere and sell it as you like to any one any where. and no one shall interfere with yon in any way. There is no need to hide and walk under cover, as if you did not own what you possessed. You are free, and can dispose as you choose of what is yours."

(உழு தொழிலாளரே, கடவுள் உங்களைக் காப்பாராக. இனி நீங்கள் உங்கள் தானியங்களை எவ்விடத்துக்கும் எடுத்துச் செல்லலாம்; யாருக்காகிலும் விற்கலாம். உங்கள் செயல்களில் யாரும் எவ்வகையிலும் தலையிட மாட்டார்கள். உங்களுக்குரிய பொருளுக்கு உரிமை யற்றவர்கள் போலக் கரவுடன் பதுங்கித் திரியவேண்டிய அவசியம் இனி இல்லை. உங்களுக்குரிய பொருள்களை உங்களுக்கு விருப்பமான முறையில் விற்றுக் கொள்ள முழு உரிமை உண்டு.)

முடிவில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். திரு. முதலமைச்சர் தம் ஆழ்ந்தகன்ற அரசியல் அறிவினால் நாட்டு மக்கள் உள்ள மறிந்து கொணரும் இத்துணிவுமிக்க ஏற்பாட்டைச் செவ்விதின் நிறைவேற்றும் பொறுப்பு நாட்டு மக்களிடம் தான் இருக்கிறது. அமைச்சர் கூறுவது போல் மக்களிடையில் பேராசை எண்ணங்கள் முற்றும் ஒழிந்து நெறிப்பட நடக்கும் பண்பு மிகுவிக்க இறைவன் அருள்வானாக.

[சி. து. க.]


நஞ்சன்கூடுபல்பொடி

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1

# இயற்கையும் கடவுளும்

M. K.சாமி.

"இவ் வுலகத்தையும், வான் சுடர்களையும், இவற்றிலுள்ள பொருள்களையும் தோற்றுவித்து இவற்றை இயக்கிக் கொண்டிருப்பது எது?" என்றால், உடனே "கடவுள் என்னும் ஒரு பரம்பொருள்" என்று பலரும் சொல்லுவர். ஆனால் சிலரோ "எல்லாம் இயற்கை" என்று சொல்லுவர். "கடவுள்" என்பதன் முழு இலக்கணத்தை எப்படி நாம் அறிய முடியாமலிருக்கின்றோமோ, அப்படியே "இயற்கை" என்பதன் முழு இலக்கணத்தையும் அறியமுடியாமலிருக்கின்றோம். ஆயினும் நம் சிற்றறிவைக் கொண்டும் ஆன்றோர் கூறியவற்றைக் கொண்டும் 'கடவுள்' 'இயற்கை' என்பவைகளின் இலக்கணங்களை நாம் ஒரு சிறிது அறிய முடிகிறது.

'இயற்கை' என்பது எது? 'கடவுள்' என்பது எது? கண்ணுக்குத் தோன்றுவனவாகிய ஞாயிறு, திங்கள், விண்மீன்கள், நிலம், கடல் முதலியன 'இயற்கை' என்றால், இவற்றை இயக்குவதாகிய, கருத்துக்குப் புலப்படும் "ஆற்றல்" எதுவோ, அதையே நாம் கடவுள் என்கின்றோம். ஏனென்றால் 'கடவுள்' என்பதற்குக் 'கடவும் அல்லது செலுத்தும் பொருள்' என்றே ஆன்றோர்கள் பொருள் கூறியிருக்கின்றனர். * 'கடவுள்' 'இயவுள்' என்பன ஒரு பொருட் பன்மொழிகள். "இயவுள்" என்பது இயக்கும் பொருள்; 'இயற்கை' என்பது இயங்குந் தன்மை; அதாவது 'இயங்கும் பொருளின் இயங்குந் தன்மை' யாகும். இயங்கும் பொருளானது, இயங்குந் தன்மையால் தோற்றத்தையும் ஆற்றலையும் வெளிப் படுத்துகின்றது. அவ்வழி "இயற்கை" என்பது கடவுளின் "உடல்" எனவும், "கடவுள்" என்பது இயற்கையின் "உயிர்" எனவும் கொள்ளத் தக்கன. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும் "இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்" என்னும் நூலில் (66-ம் பக்கம்) கீழ்வருமாறு குறிக்கின்றார்:—

"இயற்கை என்பது சத்தென்னுஞ் செம்பொருளின் உடல். அவ்வுடலைக் கொண்டே உயிரெனுஞ் செம்பொருளை யுணர்தல் வேண்டும்.

"தோற்றமும் ஆற்றலும் இணைந்ததையே 'இயற்கை' என்கின்றோம்" என்றால், "கடவுள் என்பது தோற்றமும் ஆற்றலுமாகிய இயற்கையை இயக்கும் பொருள் என்றே சொல்லப்படுகின்றது; ஆதலால், இயற்கை என்பதைக் காட்டிலும், கடவுள் என்பதே உண்மைப் பொருள் பொதிந்த மொழியாக ஆன்றோர்களால் வழங்கப் பட்டு வருகின்றது" என்க.

தோற்றமும் ஆற்றலும் இணைந்ததேயாயினும் இயற்கை என்பது தானாக ஒரு நெறிப்பட இயங்குமா? இயங்காது. எப்படியெனில், நீராவி எந்திரத்தில், "நீராவி" என்னும் ஆற்றலும், "எந்திரம்" என்னும் தோற்றமும் ஒருங்கே அமைந்திருப்பினும், அறிவுள்ள மனிதனால் இயக்கப்பட்டன்றோ அவ்வெந்திரம் முறையாக இயங்குகின்றது? அதேபோலத் தோற்றமும் ஆற்றலுமிணைந்த இயற்கையானது, கடவுள் என்னும் பேரறிவுப் பொருளால் இயக்கப்பட்டு ஒரு நெறிப்பட இயங்குகின்றதேயல்லாமல், தானாக இயங்குவதில்லை.

"மனிதன்" என்னுஞ் சொல், சிறப்பாக "மனத்தை யுடையவன்" என்ற பொருள் தருமாயினும், பொதுவாக உடல், உயிர், மனம் ஆகியவற்றையுடைய ஓர் உயிர்ப் பொருளைக் குறித்தல் போலக் "கடவுள்" என்னுஞ் சொல், சிறப்பாகக் 'கடவும் பொருள்' என்ற பொருள் தருமாயினும், பொதுவாகத் தோற்றம், ஆற்றல், அறிவு இவற்றையுடைய பரம்பொருளையே குறிக்கும்.

பண்டைக் காலத்து ஆன்றோர்கள் கடவுளை ஓர் உயிர்ப் பொருளாகவும், பேரறிவுப் பொருளாகவும் கண்டு போற்றி வணங்கினார்கள். காட்டாக,

"நின்றியங்கும் ஒன்றலா
உருக்கள் தோறும் ஆவியாய்
ஒன்றியுள் கலந்து நின்ற
நின்ன தன்மை இன்னதென்று
என்றும் யார்க்கும் எண்ணிறந்த
ஆதியாய் நின் னுந்திவாய்
அன்று நான்முகற் பயந்த
ஆதிதேவன் அல்லையே."

*ஆசிரியர் இளவழகனார் எழுதிய "சங்கநூற் கட்டுரைகள்" முதற் புத்தகம் 107ம் பக்கம் பார்க்க.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

என்னும் திருமழிசைப் பிரான் அருளிய திருச்சந்த விருத்தத்தில் கடவுள் ஓர் உயிர்ப் பொருளாகவே விளக்கப்பட் டிருக்கின்றார்.

ஆசிரியர் மறைமலையடிகளாரும் தமது முல்லைப்பாட்டாராய்ச்சி யுரையில்: பழந்தமிழரின் திறத்தைக் கூறவந்த விடத்து (பக்கம் 7) "உலக இயற்கையிலுள்ள அழகினைக் கண்டு வியந்து அவ்வளவில் அமைந்து விடாமல், அவ் வியற்கையின் உள் நுழைந்து அங்கெல்லாம் பிறழாத ஓர் ஒற்றுமையும், அவ் வொற்றுமையினை நிலைப்படுத்தி மறைந்து கிடக்கும் ஓர் உயிர்ப் பொருளின் இருப்பும் கண்டறிந்து களிப்படைந்தனர். அங்ஙனம் இவ்வுலக இயற்கையில் மறைந்து விரிந்து கிடக்கும் அவ்வுயிர்ப் பொருளையே "கடவுள்" என்று துணிந்து அதனை மனத்தால் நினைந்து நாத்தழு தழுப்ப வாழ்த்தி வழிபட்டு வாழ்ந்தனர்" என்று இவ்வாறு தமது நுட்ப மதித்திறத்தால் எடுத்துக் கூறி யருளினார்கள்.

"உணர்வியலாம் உயிர்
ஒன்றும் ஒழித்த
உடல் முதல் அனைத்தும்
உயிர் அல் பொருளே."

என்ற நன்னூற் சூத்திரத்திலுள்ள 'உணர்வியலா முயிர்' என்னுந் தொடரால் 'உயிர் அறிவுமயமா யிருக்கின்றது' என்று குறிக்கப்படுதலால், ஒவ்வொரு வகையான உயிருக்கும் ஒவ்வோர் அறிவு இயல்பாகவே அமைந்திருப்பது போல, இப் பார் (பிரபஞ்சம்) முழுவதிற்கும் உயிர்ப்பொருளான கடவுளுக்குப் பேரறிவு உண்மை தெளிவாய் விளங்குகின்றது. மற்றும், "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்று தாயுமானாரும், "உலகம் உயிர் என்னும் இரண்டு வகையான பொருள்களையுங் கடந்து மூன்றாவதாயுள்ள அப் பேரறிவுப் பொருளே கடவுள் எனப்படும்" என்று ஆசிரியர் இளவழகனாரும் (மூன்று உண்மைகள் என்னும் நூலின் 10ம் பக்கம் பார்க்க) கூறியதிலிருந்து 'கடவுள் ஓர் பேரறிவுப் பொருள்' என்பது உறுதியாகின்றது.

இயற்கைத் தோற்றங்களைக் கடவுளின் உடலுறுப்புகளாக ஆன்றோர்கள் கூறியுள்ளமையைத் தேவாரம், திருநாலாயிரம் முதலிய திருமறைகளில் நிறையக் காணலாம். பாரதம் பாடிய பெருந் தேவனாரியற்றிய, சங்க நூலிலுள்ள, கடவுள் வாழ்த்துப் பா வொன்றில் கடவுள் கீழ் வருமாறு விளக்கப்பட்டிருக்கின்றார்.

"இப் பெரிய நிலவுலகமானது செவ்விய திருவடியாகவும், தூய்மையான நீரையுடைய, சங்குகள் நிறையப்பெற்ற, ஒலிக்கும் கடலானது ஆடையாகவும், ஆகாயமானது உடலாகவும், திசைகளானவை கைகளாவும், பசுமையான கதிரையுடைய திங்கள், வெப்ப கதிரையுடைய ஞாயிறு ஆகிய இவ்விரண்டும் இரு கண்களாகவும், தன்னால் படைக்கப்பட்டவைகளை யெல்லாம் பாது காத்துத் தன் திருவயிற்றுக்குள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கும், தீமை கெட விளங்கா நின்ற ஆழிப்படையை உடையவனே (திருமாலே) அறிவின் முதல்வன் என்று (ஆன்றோர்) கூறுவர்" பாட்டு வருமாறு:—

"மாநிலஞ் சேவடியாகத், தூநீர்
வளை நரல் பௌவ
முடுக்கை யாக
விசும்பு மெய்யாக,
திசை கையாக
பசுங் கதிர் மதியமொடு
சுடர் கண்ணாக,
வியன்ற வெல்லாம் பயின்றகத்
தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே."

(வளை — சங்கு. நரல் — ஒலித்தல். பௌவம் — கடல். உடுக்கை ஆடை. விசும்பு ஆகாயம். சுடர் — ஞாயிறு. அகம் — வயிறு வேதம் — அறிவு. திகிரி — ஆழிப் படை)

இத்துடன் மணிவாசகப் பெருமான் அருளிய கீழ் வரும் பாட்டையும் ஒப்பு நோக்குக.

"வானாகி,மண்ணாகி, வளியாகி,
ஒளியாகி
ஊனாகி, உயிராகி. உண்மையு
மாய், இன்மையுமாய்க்
கோனாகி யான் என
தென்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி
வாழ்த்துவனே."

தற்காலத்தவரில் சிலர் கடவுள் தன்மையை நீக்கி, "இயற்கை இயற்கை" என்று கூறுவதைக் காட்டிலும், பண்டைக் காலத்தவர் இயற்கையைக் கடவுளோடிணைத்துப் போற்றிப் பணிந்த அறிவாற்றலைக் கண்டு தெளிவு பெறுவோமாக.

# * நிலவுக்கு - - - - *

[கருத்து]

தண்ணருள் நிலவே !

கடிதம் கிடைத்தது என்று குறிப்பிட்டிருந்தாய். என் எண்ணங்களுக்கு "ஆசி கூறுகின்றேன்" என்று அறிவித்திருக்கிருய். நான் நினைத்தபடி "இன்ப வாழ்வு" வாழ்ந்தால் அது "எனக்கு மிக்க மகிழ்ச்சி" என்று இயம்பி இருக்கின்ருய்.

என் எண்ணங்களுக்கு, உன் ஆதரவு கிடைத்தமைக்கு என் நன்றி.

தோழீ! என் எண்ணத்தை—என் வருங்கால வாழ்வின் திட்டங்களை—இன்னும் கேள். எவர் கோரிய காரியமும் நேரிய முறையில் இருக்கின்றதா? என்று ஆராய்வேன். தலைவனுடன் (கணவன்) கூடிப் பேசி அதனால் ஏற்படும் முடிவின்படி நடக்க முயலுவேன், உறவினரிடமும், சுற்றத்தாரிடமும் அன்பு பாராட்டுவேன். மற்றவர்களிடம் "அருட்டன்மை" கொண்டொழுகுவேன்.

"கற்புக்கு அழிவு வாராமல், காவலோடு கூடி இருக்கிறது தான், பாவை போலும் முருவமுடைய பெண்களுக் கழகு" (காவல் தானே பாவையர்க் கழகு) என்று கொன்றை வேந்தனிலும், மாதர்களிடம், மனக் காவலில்லாத போது, மதிற் காவல்கள் முதலிய காவல்கள் பயன் படா என்று குறளிலும் நான் படித்திருக்கிறேன். (சிறை காக்கும்காப்பு ……………நிறை காக்கும் காப்பே தலை)

நல்லவர் வழி நின்று, அவர் சொல்லிய அறிவுரைகளின்படி நடப்பதற்கு நான் அணுவளவும் தயங்கேன்.

"பிறப்பதற்கு முன்பே தந்தையை இழந்தவள். பிறந்த பிறகு மட்டும் என்ன? அவள் காலச்சக்கரம் நன்ருகச் சுழன்றதா? அதுவும் இல்லை, பிறந்தவுடன் அம்மா இறந்து விட்டாள்; அவளுடைய பிறந்த வேளை போல்லாதது" என்றெல்லாம். ஏளனமாக என்னைப்பற்றிப் பேசுவர்—நான் தான் அவர்களுக்குக் கூற்றுவன் என்று நினைத்து.

நிலவு! நாட்டிலே தற்போது, சில காலமாக அதிகமாக நச்சுக் கொள்கைகள் பரவி வருகின்றன. அங்கு....இலங்கையில்—எப்படியோ எனக்குத் தெரியாது.

"அன்பு" இருக்கவேண்டிய இடத்திலே "அடக்குமுறை" நிலவுகிறது. "பண்பு" இருக்க வேண்டிய இடத்திலே "பைத்தியக் காரத்தனம்" பரவி இருக்கிறது. ஆட்சியில் இருப்பவர்கள் படக்காட்சியில் வரும் அரசர்களாக உலவி வருகின்றனர்.

கடவுள் என்ற காரணம் காட்டி, அதனுல் பல கயமைத் தனங்களைக் கண் மூடித்தனமாகச் சிலர் செய்து வருகிருர்கள். இறைவன் "அருட்டன்மை உடையவன் என்பதை மறந்தனர். "அன்பு" உருவத்தினன் என்பதை மறந்தனர். "அறிவின் பாற் பட்டவன்" என்ற எண்ணத்தை மறந்தனர். பலன் தினம் தினம் அட்டூழியங்கள் அதிகமாகிக் கொண்டு வருகிறது ஆண்டவன் பெயரால்.

என் தாயும் தந்தையும் எவ்வாறு இல்லறத்தை நடத்தினர்களோ, அது எனக்குத் தெரியாது. எனக்குப் "பிறரைத் தெரிந்து கொள்ளும்" அறிவு வந்த போது, நான் அவர்களைப் பார்த்திருந்தாலல்லவோ தெரியப் போகிறது? இருந்தும் என்ன! நான்தான் என் பெற்ருேர்கள் இறந்ததற்குக் காரணம் என்று கூறுகின்றதே சுற்றுப் புறம்! அதற்குக் காரணம் என்னல் நிச்சயமாய் அறிந்து கொள்ள முடியவில்லை.

தோழீ! நீ நினைக்கின்ருய் நான் "வேனில்" மேல் பற்றருக் காதல் கொண்டு விட்டேனென்று. அந்த எண்ணந்தான் தவருனது. இது என்ன முன்னுக்குப் பின் முரணுன பேச்சு என்று நினைக்கக் கூடும்.

ஒருவனை மணக்கப் போகிறேன் என்ற அந்தக் காரணத்தினுல், மணம் நடவாததற்கு முன்பு அவன் மேல் நான் காதல் கொண்டிருக்கத்தான் வேண்டும் என்ற கட்டாயமா என்ன? இல்லை; அந்தக் கருத்

தருதலக் கைத்தறிகளில்
நெய்த
மேல் துட்டைகள்
(டவல்கள்)
முறுக்கு நூலால் ஆனவை!
தூய்மையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்ம்.
அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"
வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!
தருதலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P.O.

துத் தவறானது. உரிய வயதில் நாங்கள் பிரியமாகப் பழகினோமா? சிறிய வயதில் நாம் ஒன்றாக இருந்தோம்; ஓடி விளையாடினோம்; படித்தோம்; அப்போது நான் — என்! நீயும் கூடத்தான்—வேணியுடன் பழகினேன்—ஒரு மாணவி ஒரு மாணவனுடன் பழகும் முறையில்; ஒரு தங்கை, அண்ணனுடன் பழகும் முறையில்.

பிறகு ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டன. அன்றிலிருந்து இன்றுவரை நான் வேணியை கண்ணால் கூடப் பார்த்தது கிடையாதே!

அன்றிருந்த குணங்கள் எத்தனையோ என்னிடமிருந்து மாறுபட்டிருக்கின்றன. உருவத்திலும் வேறுபாடு அடைந்திருப்பதை நான் நன்கு உணர்கிறேன். வேணியும் இதைப்போல் மாறித்தான் இருக்க வேண்டும்.

அவன் — இல்லை — அவர் எப்படி இருப்பார். சின்ன வயதில் ஏற்பட்ட அனுபவங்களும் பழக்கங்களும் என்னால் எளிதில் மறந்து விட முடியவில்லையடி.

நான்தான் உணவு வகைகளைச் செய்வேன், இன் சொல்லோடு அதை என் தலைவருக்குப் பரிமாறுவேன். அவர் ஆர்வமுடன் உண்ணுவதைப் பார்த்து என் மனம் விம்மிதம் அடையும் துன்பம் நேரின் அதைப் போக்க வழி தேடுவேன். துயரப் பட்டுக்கொண்டிருக்க மாட்டேன்.

உள்ளதைப் பகிர்ந்து கொடுத்து உண்ணும் உயரிய கருத்துடையவளாக விளங்குவேன்.

“இதோ வந்து விட்டேன் தாத்தா”.

கலாசாலையிலிருந்து தாத்தா வந்து விட்டார். கூப்பிடுகிறார்.

—இளநகை.

# கச்சியப்பர் கவித்திறன்

சி. து. க.

(முன் தொடர்ச்சி)

கச்சியப்பர் வாழ்ந்தவிடம் தொண்டை நாட்டைச் சார்ந்தது. பெரும்பாலும் நெல்லறு வயல்கள் நிரம்பிய மருத நாட்டு வளமிருந்தது. ஆறுகளின் வற்றா நீரூற்றுக் கால்வாய்களும் ஏரிகளும், குளங்களும் யாண்டும் நிறைந்து தள்ளாவிளையுளாற் சிறப்பெய்திய நாடு தொண்டை நாடாகும். புலவர், மிக நெருங்கிப் பழகிய நாடு மருதமே என்பதற்குச் சான்றாக, இவர் பாடிய நாட்டு வளத்தில் ஐந்திணை வளங்களின் அழகியல்புகளில் மருதமே தனிச்சிறப் புடையதாக எடுத்தோதப் படுதல் காண்க. வயலில் நெற்பயிர் வளருமியல்பினை இவர் கூறியது போல இதுவரை யாரும் கூறியதில்லை.

நெற்பயிருக்காக முதன் முதலில் நாற்று விடுதல் தொடங்கிக் கதிர் முற்றி அறுவடையாகும் வரையில் சிறந்த முறையில் விவரித்துரைத்த செய்யுட்கள் மிகச் சுவைதருவன. சுமார் ஐம்பது பாடல்களில் நெல்லின் வரலாறு சொல்லப் படுகிறது. தம் ஆசிரியர் சிவஞான முனிவர் தத்துவக் கருத்துக்களை, ஆங்காங்கு உவயக் கருத்துக்களாகக் கொணரும் பாண்மை போலக் கச்சியப்பரும் உவம வாயிலாக அரிய கருத்துக்களை வெளிப் படுத்தல் உணரலாம், அவ்வுவமங்களிற் சில இவண் காணலாம்.

நாற்றைப் பறித்துத் திரட்டிக் கட்டிச் சேறு போக மோதி, நீரில் நன்கு அலைத்துக் கழுவி அமைத்த முடிகளை, உழத்தியர்கள். வேறு நிலத்தில் நடுகிறார்கள் நடப்பெற்ற நாற்றுக்கள் தம் பழைய உருமாறி வளர்கின்றன. இத்தோற்றம், கூற்றுவன்

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

உயிர்களைத் தாம் வாழ்ந்த உடல்களினின்றும் கூறுபடுத்தி நீக்கிக் குற்றம் களைந்து ஒதுக்கியபின், நல்வினையால் அவ்வுயிர்கள் வேற்றுடல்களில் புகுந்து செழிக்கும் தன்மையைக் காட்டுகின்றது.

உயிர்கள் தோறும் அவ்வவற்றின் பரிபக்குவத்திற் கேற்ப, முப்புரங்களை யெரித்த இறைவன் திருவருள் பொருந்துமாறுபோலப் பண்ணையின் வயல்கள் தோறும் வரப்புக்களின் அளவுக் கேற்ப, கால்களிலிருந்து வரும் நீர் நிரம்பி நின்றது.

ஓர் உயிரானது, உடலை விட்டு நீங்கினும் தொடர்ந்து நின்ற ஆணவ மலத்தினால் மீட்டும் பிறவி உண்டாதலைப் போலக் களைந்தெடுத்த அல்லி மலர்களில் கிழங்குகள் எஞ்சி நிற்பதினின்றும் மீண்டும் வயலெங்கும் அல்லி முதலிய கொடிகள் களையாகி, நெருங்கிப் படர்ந்தன.

துன்பம் தரும் பிறப்பு நீங்கும்படி இறைவனைப் பூசித்தற்குரிய வளமிக்க மலர்கள் நெற்பயிர்களுக்கிடையே மிடைதலால் 'களை' என்னும் பெயரால் அழைக்கப் படுகின்றன. சிறந்த நிலையுடையோரும் ஒருவர் பாற் சென்று அவர்க்குத் தளர்வினைச் செய்வாராயின் அவர்கள் மதிப்பில் தாழ்த்து எண்ணப் படுவர்.

இறைவன், சதாசிவ மூர்த்தத்தில் வெண்மையுருத் தாங்கி, 'ஈசன்' என்னும் நிலையில் நீலவுருவம் பூண்டு, பின்னர், 'அரன்' என்று சிவந்த வுருவத்தைக் கொள்ளும் தன்மையைப் போல, நெற்பயிர் முளைக்குந் தருணத்தில் வெண்மையாகி, அதன்பின் மரகத நிறச் சோலைகள் விரித்து வளர்ந்து, பின் பழுத்த நிலையில் செம்பொன் நிறத்தோடு விளங்குகின்றன.

சிவஞான முணர்ந்த நல்லடியார் செங்கையிற் சேர்த்த பொருள், தந்தவருக்குப் பெரும் பயனை விளைத்தலைப் போல, உழவர்கள் விதைத்த சிலவிதைகள் பெரும்பயன் தரும் விளைவாக விளைந்த சாலியானது மரகத நிறம் நீங்கிச் செந்நிறம் பூண்டு பழுத்து உலகத்தைப் புரக்கின்ற செயலால் இறைவன் பக்கலில் இனிதமரும் உமையம்மையினை ஒக்கின்றது.

உடல், கருவி, புவனம், போகம் ஆகியவற்றை ஒருங்கு பொருந்தியும் சிவம்' ஒன்றையே காணும், அறியாமை நீங்கிய நல்லடியார்கள், உலக இன்பங்கள் யாவையும் ஒழித்து நிற்கும் தன்மையைப் போல, வயலெங்கும் விளைந்த நெற்பயிர்கள் முற்றிப் பழுத்து விட்டதால், நீர்வேண்டாத நிலையை உணர்ந்த உழவர் வயலிற்றங்கிய தண்ணீரைக் கீழ்மடையாற் போக்கி வயலை உலர்த்தலானார்கள்.

---


## குருகுல - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
   விலை அணா 6.
2. திருமூலர் அருள்மொழிகள்
   விலை அணா 4.
3. தணிகைமலை அல்லது அமைதி
   விலை அணா 6.
4. திருக்கழுக்குன்றப் பதிகம்,
   விலை அணா 2.
5. கருக் கலை
   விலை அணா 4.
6. மூன்று உண்மைகள்
   விலை அணா 3.
7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
   விலை அணா 9
8. முல்லைப்பாட்டு அகராதி,
   விலை அணா 8.
9. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
   விலை ரூ. 1.
10. ஆத்திசூடி – கருத்துரை
    விலை 0-0-3.

**கிடைக்கும் இடம்:**

குருகுல, மாம்பாக்கம்,

மதுராந்தகம், **P. O., (S.I.R.)**


பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)